**சுருக்கம்**

தொழில் – சென்னை–ராணிப்பேட்டை மற்றும் ராணிப்பேட்டை–ஒசூர் தொழில் வளாக வழித் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு சென்னை–பெங்களூரு தொழில் வளாக வழித் திட்டம் என அறிவித்தல் தொடர்பாக – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்.ஐ.ஜி.1) துறை

அரசாணை (நிலை) எண்.241 நாள் : 30.09.2015

மன்மத, புரட்டாசி –13

திருவள்ளுவர் ஆண்டு 2046

**ஆணை:**

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை–பெங்களூரு தொழில் வளாக வழித் திட்டம் தொடர்பாக கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்:

> மார்ச் 22, 2012–ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் – 2023 ஆவணத்தில், நட்சத்திர திட்டங்களாக அறிவிக்கப்பட்ட சென்னை–ராணிப்பேட்டை மற்றும் ராணிப்பேட்டை–ஒசூர் தொழில் வளாக வழித் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு சென்னை–பெங்களூரு தொழில் வளாக வழித் திட்டம் என செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழில் வளாக திட்டப் பகுதியில் உள்ள பொன்னேரியில் சிறப்பு நோக்க நிறுவனம் SPV மூலம் பொன்னேரி தொழில் முனையம் Ponneri Industrial Node, 20 ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக ரூ.13,314 கோடி மதிப்பீட்டில், 2016–19 காலக்கட்டத்தில் முதற்கட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டம் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தாலுகாவில் உள்ள 10 கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 21,996 ஏக்கர் பரப்பளவில் அமையும்.

2. மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்த தகுந்த கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு டிட்கோ, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
டிட்கோ, 19–ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை–600 008.
நகல்
சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை, சென்னை–600 009.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1) துறை, சென்னை– 600 009.
இ.கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்